பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L
அளவையியல்
By
திரு. விக்கி
90 BATCH
Sun:8-00a.m Mon 3-00p.m.
89 BATCH
Sun 7-00a.m. Mon4-00p.m.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

# உதயன்

விலை ரூ 2/.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L
வர்த்தகம்
By
திரு. தேவா
90 BATCH
Wed. Fri: 3-00 p. m.
89 BATCH
Wed. Fri : 4-00p.m.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடு புரட்டாதி ௴ 27 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ற.அவ்வல் பிறை 01 (13 - 10 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 206

# கிட்டு உட்பட 9 பேர் மட்டும் யாழ். நகரில் நேற்று விடுவிப்பு

## பெரியாஸ்பத்திரி வளவில் பிரமுகர்கள் முன்னிலையில் நடந்தது

— அலுவலகச் செய்தியாளர்கள்: —

யாழ்ப்பாணம், அக்டோபர் 13

தமிழ்நாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஈழத்துக்கு அழைத்து வரப்பட்ட 157 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளில், ஒன்பது போ மட்டும் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வைத்து பிரமுகர்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் முன்னாள் யாழ். தளபதி திரு. சதாசிவம் கிருஷ்ணகுமாரும் (கிட்டுவும்) ஒருவராவார்.

நேற்று நண்பகல் 12. 45 மணியளவில் அமைதிப்படை வாகனங்களில் அழைத்து வரப்பட்ட இவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வளவில் பிரசைகள் குழுக்களின் முன்னிலையிலும் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள், முன்னணிப் பிரசைகள், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் ஆகியோர் முன்னிலையிலும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த விடுவிப்பு நிகழ்ச்சிக்கென மாநகர ஆணையாளர் சி வீ.கே. சிவஞானம் அமைதிப்படை பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டிருந்தார்.

அமைதிப் படையின் யாழ். நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோன் ஜீப்பில் இருந்து கைத்தாங்கலாக கிட்டுவை இறக்கி வந்தார்.

கிட்டு ஜீப்பில் இருந்து இறக்கப்பட்டதும் கூடியிருந்த மக்கள் கூட்டம் கரகோஷம் செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததுடன் ''கிட்டண்ணை கிட்டண்ணை'' எனக் கோஷமிட்டுத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்
(6 ம் பக்கம் பார்க்க)



யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து விடுவிக்கப்பட்ட வேளையில் கிட்டு. அருகில் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி வி.கே. சிவஞானமும் காணப்படுகிறார்.

* * *

நேற்று விடுவிக்கப்பட்ட ஏனைய போராளிகளில் ஐவர்.



### பிந்திய செய்தி

## விடுவிக்கப்பட்டோர் ஒப்படைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், அக்டோபர் 13

நேற்று விடுவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆனைவரும் நேற்று மாலையில் தாம் விரும்பியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்

நேற்று நண்பகல் இவர்கள் விடுவிக்கப்பட்ட பின் யாழ்.செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவு உறுப்பினர்களும் வடக்கு. கிழக்கு பிரஜைகள் குழு இணைப்புக் குழுவின் பிரமுகர்களும் மற்றும் பிரஜைகள் குழுக்களின் பிரமுகர்களும் யாழ். நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோனைச் சந்தித்து பேச்சு நடத்
( 6ஆம் பக்கம் பார்க்கவும் )

### முச்சந்தி முரளி



ஓம், ஓம் 1964 லியே பிரசா உரிமை பற்றி பெரிசாகச் சொல்லிச்சினம் ஆனல் இன்னும் அர்த்த புஷ்டியாய் நடக்கயில்லை. அதை மாதிரித்தான் புதிசும் இருக்கும்...!

## குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், அக் 13

நேற்று இரவு 7 45 மணியளவில் யாழ் பிரதான வீதிப் பக்கமாக கேட்ட குண்டுச் சத்தத்தினுல் நகரில் பெரும் பீதி நிலவியது.

இந்த குண்டுச் சத்தத்தை அடுத்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன

ஆனாலும் இது பற்றி மேலதிக விபரங்கள் தெரியவில்லை. (அ-9)

## பாடசாலைகள் மூடப்படும் என அறிவிப்பு

கொழும்பு, அக் 13

நாட்டில் உள்ள சகல அரசாங்க பாடசாலைகளும் இன்றும் நாளையும் மூடப்பட்டு இருக்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

கண்டி, ஹப்புஸ்துவ கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகள் அனைத்தும் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டு இருக்கும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்தது

தென் இலங்கையில் மாணவரிடையே அமைதியின்மை தீவிரமாகப் பரவிவருவதைத் தொடர்ந்து இந்தநடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் அறிவித்தது. ஏற்கனவே பத்து கல்வி மாவட்டங்களில் உள்ள 115 பாடசாலைகளை அமைச்சு மறு அறிவித்தல் வரை மூடி விட்டது தெரிந்ததே. (அ-எ)

## தெல்லிப்பளையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக் 13

தெல்லிப்பளை பகுதியில் நேற்று மாலையில் தாக்குதல்சம்பவம்ஒன்று நடந்ததாக அறிய வந்தது.

ரோந்து சென்ற அமைதிப்படைவாகனம் ஒன்றின் மீது கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சொல்லப்பட்டது ஆனல் விவரம் எதுவும் தெரியவரவில்லை. (அ-9)

## றக்கா வீதியில் ஒருவர் கொலை

யாழ்ப்பாணம், அக் 13

நேற்று மாலை யாழ் கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள றக்கா வீதிச் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில ஒருவர் கொலையுண்டார்.

நேற்று இரவுவரை இவருடைய சடலம் அந்த இடத்திலேயே கிடக்கக் காணப்பட்டது. (அ-9)

## வடமராட்சியில் நேற்று ஊரடங்கு

யாழ்ப்பாணம் அக் 13

வடமராட்சிப் பகுதியில் நேற்று உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு தேடுதல்களும், சுற்றி வளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை துன்னாலைப்பகுதியில் அமைதிப் படையினர் மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கைள் மேற் கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஊரடங்கு, சேடுதல் காரணமாக நேற்றுவல்லை வெளிப் பகுதிக்கு அப்பால் வடமராட்சியுடனை தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

நேற்று வடமராட்சிப் பகுதியில் இருந்து அம்புலன்ஸ் ஒன்று மட்டும் யாழ் போதனை வைத்திய சாலைக்கு வந்து சென்றது. அதைவிட வேறு வாகனப் போக்குவரத்து எதுவும் இடம் பெறவில்லை. (அ-9)

# நாம் கேட்டவேளை யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பின் பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கும் — கிட்டு

யாழ்ப்பாணம் அக் 13

நாம் கேட்ட வேளையில், இந்தியா யுத்த நிறுத்தத்தை அறிவித்திருப்பின், அப்போதே பிரச்சினைக்கு முடிவு வந்திருக்கும்.

இப்படித் தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் யாழ். தளபதி திரு. கிட்டு.

தமிழகத்தில் இருந்து அழைத்து வரப்பட்டு, நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் விடுவிக்கப்பட்ட பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கிட்டு மேலும் தெரிவித்தாவது:-

எம்மை விடுதலை செய்க நோக்கம் இந்தியாவின் சதியாகவும் இருக்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப்படையினருடன் மோதிய சமயத்திலும் கூட, இந்தப் பிரச்சனையை சுமுகமாகத் தீர்த்துவைப்பதற்காக பேச்சுவார்த்தைகளில் ஆர்வம் காட்டி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனல் இந்தியா எமது நிலையைசரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும்
(6 ம் பக்கம் பார்க்க)

## நாடற்றவருக்கு பிரசா உரிமை வழங்க அரசாங்கம் முடிவு

கொழும்பு, அக் 13

நாடற்றவர்களுக்கு இலங்கைப்பிரசாவுரிமை வழங்க அரசு தீர்மானித்துள்ளது

இது சம்பந்தமான சட்ட மூலம் ஒன்றைக் கொண்டு வர அமைச்சரவை நேற்று முடிவு செய்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றில் இத்தகவல்தெரிவிக்கப்பட்டது

இந்திய வம்சாவளியினர் எவரும் இலங்கை நாட்டில் சட்டபூர்வமாக வசித்துவருபவர்கள், அவர்கள் இலங்கைப் பிரசாவுரிமை அல்லது இந்தியப் பிரசாவுரிமை கோரி விண்ணப்பிக்காமலிருந்தாலும் உத்தேச சட்டத்தின்
(6 ம் பக்கம் பார்க்க)

# கண்டியில் படையினர் சுட்டு மாணவன் பலி!

## 48 மணிநேர ஊரடங்கு

கொழும்பு, அக். 13

கண்டியில் நேற்றுப் பாதுகாப்புப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொரு மாணவர் காயமடைந்தார்.

இதனை அடுத்து கண்டியில் நேற்று நண்பகல் 12 மணி முதல் 48 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிரகடனப் படுத்தப்பட்டது.

கண்டியில் பாடசாலை மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்என்றும் மாணவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை அடுத்தே மாணவர் ஒருவர் சொல்லப்பட்டார் என்றும்,மற்றொருவர் காயம் அடைந்தார் என்றும் கூறப்படுகிறது.

### கொழும்பில்

கொழும்பு நகரிலும் மாணவர் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பொலீஸ் ஜீப் மீது
[6ம் பக்கம் பார்க்க)

# அமைதி நிலை தோன்றுவதற்கு ஈரோஸ் கூறும் வழிவகைகள்

யாழ்ப்பாணம் அக், 13

தமிழ்ப் பகுதிகளில் அமைதி நிலை தோன்றுவதற்கு ஈரோஸ் இயக்கம் பல நடைமுறை வழிவகைகளை, நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது

அறிக்கை விவரம் வருமாறு:-

வடக்கு - கிழக்கு ஒன்றிணைந்த மாகாண சபை உறுப்பினர் நியமனங்கள் பத்தாம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வடக்கில் போட்டியின்றியும், கிழக்கில் முஸ்லிம் முன்னணியுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் போட்டியிடும் நிலையிலும் இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தேர்தல் குறித்தான ஈழப்புரட்சி அமைப்பின் நிலைப்பாட்டை இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

நாம் காத்திரமான ஜனநாயக வரம்புகளையும், அதன் அங்கமான தேர்தல்களையும் முற்றிலும் நிராகரிப்பவர்கள் அல்லர் என்ற நிலைப்பாட்டில் இருந்து எமது விளக்கமானது இங்கு தரப்படுகின்றது.

இலங்கை-இந்திய ஒப்
(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

13 - 10 - 1988
புரட்டாதி - 27
வியாழக்கிழமை

சுபநேரம்:-
07-32முதல் 09-02வரை
ராகுகாலம்:-
01-32முதல் 03-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

# மாங்குளத்தில் நிலக் கண்ணிவெடி

## எட்டு இராணுவத்தினர் பலி?

மாங்குளம், அக். 13

மாங்குளத்துக்கும் கனகராயன்குளத்துக்குமிடையில் மன்னகுளம் என்னுமிடத்தில் நேற்று நிலக்கண்ணி ஒன்று வெடித்ததை அடுத்து எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

மற்றும் உயர் அதிகாரி ஹெலிக்கொப்படர் மூலம் மாங்குளத்திலுள்ள வவுனியா வீதியிலும், துணுக்காய் வீதியிலும உளள முகாம்களைப் பார்வையிட வந்ததையடுத்து நண்பகல் 12 மணிவரை சகல போக்குவரத்துக்களும் தடைசெய்யப்பட்டிருந்
(6 ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda Reconditioned புதிய பழைய Model C- 90, C- 70, C- 50, CD- 90 Lancer- 90, MB- 5 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No. 16, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (A G.A. அலுவலகம் முன்பாக). (7008)

ராசலிங்கம் மகேஸ்வரி ஆகியஎனது அடையாள அட்டை [ 475160146V ] 01.10.88 அன்று மணிக் கூட்டு கோபுரத்திற்கும்- ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உதயன்காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7011)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் Ceiling fan, Room Heater மகாராஜா ஹோல் செற் T.V Stand சண்ணுடி மேசை Kenwood Electric Cooker, Oven சாப்பாட்டு மேசை, கதிரை. Office மேசை. மெஷின், கட்டில் மெத்தை Record-player கிளாஸ்வகை மற்றும் பலவித பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. பழைய நம்:14/1 அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (7010)

திறி ஏக்கர் பாம் 15 நாள் நிரம்பிய Hyline வெள்ளை நிறப் பேட்டுக் கோழிக்குஞ்சுகள் கடந்த மாதம் 28 ஆம் திகதியிலிருந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் காலை 9 மணியிலிருந்து,4-30மணி வரையும் சுஜேராஸ் ஸ்தாபனம், இல. 21, வேம்படி றேட், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். (C/575)

தரமான அலுமினியப் பாத்திரங்கள், பொங்கல் பானைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். பிள்ளையார், 259 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (7095)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துகள், பிறந்தநாள் வாழ்த்துக்கள் தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுடன்) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 145, நவீன சந்தை யாழ்ப்பாணம். C 357

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre கோழிக்குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். (6988)

### இறைச்சிக் கோழிகள்

Broilers இறைச்சிக் கோழிகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர்; யாழ்ப்பாணம். [6989]

புரொயிலர் கோழிகள் (Broiler) விருத்துக் குஞ்சுகள் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணு பாம், செம்மாத் தெரு, யாழ்ப்பாணம். (C/570)

### கோழிக்குஞ்சு விநியோகம்

கோல்டன் கொமற் பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள், Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள், Hyline பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு பேட்டுக் குஞ்சுகள்,புரொயிலர் குஞ்சுகள் 14ஆந்திகதி வெள்ளிக் கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க:சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன் கொக்குவில் (7092)

புரொயிலர் குஞ்சுகள் (Cristombu Farm Baira Farm)10, 11, 12 &13ஆந் திகதிகளில் விநியோகிக்கப்படும். பதிவு செய்க; சற்குண ராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7093)

ஒவ்வொரு வாரமும் (Lohmann) பிறவுண் பேட்டுக்குஞ்சு சேவல் குஞ்சு கறுப்பு [பிலிமத்] வரிக்குஞ்சு, புரொயிலர் குஞ்சு; குறைந்தவிலைக்கு விநியோகிக்கப்படும். உடனே பதிவுசெய்யவும். இல:9, கந்தையா லேன், சூராவத்தை றேட்,சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்.) (7089)

### கோழிக்குஞ்சு, தாராக் குஞ்சு விநியோகம்

தாராக்குஞ்சு புரொயிலர் குஞ்சு கறுப்பு Hyline பேட்டுக் குஞ்சுகள் செற்றுபாம்சேவல 14-10-88ல் விநியோகிக்கப்படும். A. J.சுப்பிரமணியம் 45 கொழும்புத்துறை வீதி (சந்தானமாதா கோவில் அருகாமையில்)யாழ்ப்பாணம். லீலாபதி கண்டி றேட்மிருசுவில் (7014)

### தேவை

கால நடை வைத்திய அபிவிருத்தி ஆலோசனை சேவைகளுக்கு காலை 8 மணி முதல் 12 மணி வரை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Dr- கு கிருபாகரன், 'மணி விலாஸ்'' பிரதான வீதி. சுன்னுகம். மாலை ''சிவகிரி'' குருப்பசிட்டி. (C/580)

### சுஜேரா ரவல்ஸ்

மேற்கு ஜேர்மனிக்குச் (West Germany) செல்ல விரும்பும் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் தாமதியாது சுஜேராஸ் ஸ்தாபனம் No:21 வேம்படி றேட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (C/574)

### தவறிவிட்டது

பாக்கியராஜா கண்ணம்பாள் ஆகிய எனது அடையாள அட்டையும் (இல: 656740368 V) பல்கலைக் கழக அடையாள அட்டையும் (85/FA/V/3) கோப்பாய் யாழ்ப்பாணம் ஆகிய வற்றுக்கிடையிலான மினிபஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7006)

வீரசிங்கம் - தர்மலிங்கம்(அளவெட்டிதெற்கு) ஆகிய என்னுடைய அடையாள அட்டை இல. 541363084V, பொலிஸ் றிப்போட், Bill 8470 ஆகியவை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 385, C/o உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7099)

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும். Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (7100)

### வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட ''பிரதீப் மூவிஸ்'', புதுவீதி, கொய்யாத் தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' (சுணில்) (6980)

# கல்வி

### ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை (இரண்டாவது) 16- 10- 88ஞாயிறு பி.ப 3.00 மணிக்கு நடைபெறும். பெறுபேறுகள் விளக்கம் 19- 10- 88 புதன் பி.ப. 3 00 மணிக்கு வழங்கப்படும் முன்னரே பதிவு செய்து கொள்ளவும். மேற்படி பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வெளியாகியுள்ளது புதிய கல்வி நிலையம், (செங்கதரன் ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம் (7097)

### G C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### ஆங்கில ஆசிரிய நியமனப் பரீட்சை

பயிற்சி வகுப்புகள் இரண்டாவது பிரிவு ஆரம்பம்: 15- 10- 88 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் 4 30 - 6 00 p.m S B Iyar 12, வைமன் றி, நல்லூர். (7012)

### G. C. E. A/L - 1989

பௌதிகவியல் வகுப்புக்கள் ஆசிரியர் S. நிர்மலா B. Sc, இல 9, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வகுப்புக்கள்:- திங்கள், புதன் வியாழன் 4 . 45 - 5. 45 p.m, புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-10-88 சனி, ஞாயிறு 4 00-5.30 p m, 8.00 - 9 00 a m. 1989 ற்குரிய மீட்டல் வகுப்புகளும் ஆரம்பிக்கபடும். (7084)


# வடக்குக் கிழக்கில் அடகு வைத்தவர்களுக்கு மக்கள் வங்கி வழங்கும் சலுகைகள்

வடக்கு கிழக்கில் நிலவும் பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக அடகு வைக்கப்பட்ட தமது பொருட்களைத் திரும்பப் பெற முடியாதவர்களுக்குப் பின்வரும் சலுகைகள் வழங்கப் படவுள்ளன.

1) ஏற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வீதம் வருடமொன்றுக்கு 30% ஆக இருந்தாலும் 01-01-84 முதல் 31-12-87 வரையிலான காலப் பகுதிக்கு வட்டி வருடமொன்றுக்கு 20% மட்டுமே அறவிடப்படும்.

(2) 01-01-1988 ஆம் திகதியிலிருந்து எந்தவித வட்டியும் அறவிடப் படமாட்டாது.

(3) 31-12-88 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் தமது முற் பணத்தை முற்றுகச் செலுத்துபவர்களிடம், ஏற்றுக்கொள்ளப் பட்ட வட்டி வீதம் வருடமொன்றுக்கு 30% ஆக இருந்தாலும் 01-01-84 முதல் 31-12-87 வரையிலான காலப்பகுதிக்கு வருடமொன்றுக்கு 15% மட்டுமே அறவிடப்படும்.

(4) தமது கடனில் 10%ஐ வங்கிக்குத் திருப்பிச் செலுத்திய அடகு வைப்பாளர்கள் ஐந்து வருடத்திற்கு மேல் தமது கடனைப் புதுப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். 5 வருட காலத்திற்கு மேலதிக வட்டி அறவிடப்படமாட்டாது. கொடுப்பனவுகள் அடகு வைப்பாளர்களின் வருமானத்திற்கு ஏற்ப மாதாந்தம் / காலாண்டு / அரையாண்டுக்குச் செலுத்தப்படலாம். புதுப்பித்தலின் போது 01-01-84 முதல் 31-12-87 வரையிலான காலப்பகுதிக்கு வட்டி வீதம் வருடமொன்றுக்கு 20% ஆக இருக்கும்.

பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.

(C/403)


எதிர்காலச் சந்ததியினரை

# நற்பிரசைகளாக்கும் பணி ஆசிரியர் கையில்

## பரிசளிப்பு விழாவில் உரை

சங்கானை அக் 13

கட்டடங்களில் மட்டுமல்லாது கல்வி வளர்ச்சியிலும் பாடசாலை வளர்ச்சி அடைந்து எமது எதிர்காலச் சந்ததிகள் நற்பிரஜைகளாக உருவாக்கப்பட வேண்டும் இதற்கு ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியுடன் செயற்பட வேண்டும்.

யாழ் கல்வித் திணைக்கள பிரதம பொறியிலாளர் அன்ரனி பிரான்ஸிஸ் இவ்வாறு கூறினார்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக இவர் கலந்து கொண்டார்.

விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு. கா. சந்திர பாலன் தலைமை வகித்தார்.

பொறியியலாளர் அன்ரனி பிரான்சிஸ் மேலும் பேசுகையில் 'எல்லாத் தொழில்களையும் விட ஆசிரியர் தொழில் அதி சிறந்ததாகும்.

'கல்வியைப் பெறுவது கஷ்டம், கல்வியை ஊட்டுவது அதைவிடக் கஷ்டம் ஆசிரியர்கள் கஷ்டப்பட்டுக் கல்வியை ஊட்டுவதனுல் பாடசாலை கல்வித்துறையில் வளர்ச்சி அடைகிறது.' என்றுர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஷ்ட்ரு நிதி நிறுவன நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன் உரையாற்றும் போது 'பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் நன்றி மறவாது தாம் கற்ற பாடசாலையின் வளர்ச்சியில் பங்கேற்க முன்வர வேண்டும்.

'இந்தப் பாடசாலையின் குறுகிய கால வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியுறும் வேளையில் பாடசாலையின் விவசாயப் பாடப் போதனைக்காக, உபகரணங்கள் வாங்குவதற்கு நிதி உதவி செய்யவுள்ளேன்' என்றுர்.

பண்டத்தரிப்பு கொத்தணி அதிபர் திருமதி டி. தம்பிராசா உரையாற்றுகையில் 'கடந்த சில காலங்களாக தமிழ் மக்களின் கல்வியில் ஒரு வரட்சி நிலை தோன்றியிருக்கின்ற வேளையில், எமது கொத்தணிக் குடும்பப் பாடசாலைகளில் இப்பாடசாலையின் பரிசளிப்பு விழாவே முதலாவது பரிசளிப்பு விழாவாகும்' என்றுர்.

திருமதி யசோதை சரவணபவன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினுர். (இ-29)

### கனல் கலை இலக்கிய வட்டம்

கனல் கலை இலக்கிய வட்டம் எனும் இலக்கிய அமைப்பு ஒன்று கடந்த ஆரும்திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இளம் எழுத்தாளர்களின் கலை ஆர்வங்களை வெளிக் கொணரவும்— சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களைப் படைக்கவும் யாழ்ப்பாணத்தில் இந்த இலக்கிய வட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இணுவில் றேயல் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவின் போதுகலை இலக்கிய வட்ட உறுப்பினர்களில் தலைவராக செல்வன் க. ஜீவமோகன் தெரிவு செய்யப்பட்டார். (இ-10)

### நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் உதவி

மானிப்பாய், அக். 13

வன்செயல்களினுல் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், கை கால்களை இழந்து உடல் ஊனமடைந்தவர்களின் குடும்பங்களுக்கும்வழங்கவென நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினர் சாரம், பனியன், படுக்கை விரிப்புக்கள், துவாய் போன்ற பொருள்கள் அடங்கிய பார்சல்களை யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கியுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ( )

### கால்நடை பரிசோதகர் இடமாற்றம்

பருத்தித்துறை கால்நடை வைத்தியக் கந்தோரில் கடமையாற்றிய கால்நடைப் பரிசோதகர் திரு. ஆர். வீ. கந்தசாமி யாழ்ப்பாணத்துக்கும் கொட்டக்கச்சியாவில் கடமையாற்றிய திரு. எஸ். பீ கங்காபரம் கோப்பாய் கால்நடை வைத்தியக் கந்தோருக்கும் இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (இ)


# PERSONAL CLASSES FOR PHYSICS

ஆசிரியர்:
R. சத்தியசீலன்

இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

A/L 89

Sat / Sun 4.00 p m. ஒளியியல் (மீட்டல்)
Sat / Sun 5 00 p.m. வெப்பவியல்
Tue / Thu 2 45 p m. நிலைமின்னியல்
Tue / Thu 3 45 p m. பொறியியல்.

A/L 89 DAY CLASSES
( MON to FRI )

Batch I 9.00—10.15 a m ஓட்டமின்னியல் (மீற்றர் பாலம்)
Batch II 1.30— 2.45 p·m. சடப்பொருளின் இயல்புகள் (மீள்தன்மை)

A/L 90

அளவீடுகள் (வேணியர் அளவிடை) Wed / Fri 3.15 p m.
ஒளியியல் (கோளவாடிகள்) Mon / Wed / Fri 4.15 p m

ஆரம்பம்: 14-10-1988

(C/585)

# A/L 89 விஞ்ஞான மாணவர்களுக்கு

ஆரம்பம்:- 13 - 10 - 88 Thursday - 2. 30—4. 30
✶ சடப்பொருளியல் ✶
ஆசிரியர்.- Mr. மணிபம் B.Sc (Hons)
3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C/586)


## அந்தியேட்டி அழைப்பு



**செல்வன் கந்தவனம் தவேந்திரன்**
கல்வியங்காடு.

மலர்வு: 23 - 10 - 1963
உதிர்வு: 13 - 09 - 1988

அகால மரணமடைந்து முப்பத்தொரு நாட்களாகியும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தில் இருந்து என்றென்றும் அகலா. உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று13.10.88இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சமயக் கிரியைகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப்பிரார்த்திக்கும் வண்ணம்உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திரு. திருமதி கந்தவனம்,
அண்ணர் - கணேசலிங்கம்.

(7015)

## பாலர் வகுப்பு

சேர். பொன் இராமநாதன் இந்து பாலர் பாடசாலை (Montisoori) விஜயதசமி 20. 10. 88 காலை 9 30 மணிக்கு கல்வி அதிகாரி திரு க. மகேசன் அவர்களால் இராமநாதன் கல்லூரி வளவிலுள்ள இல்லத்தில் ஆரம்பமாகும். விரும்பினோர் செல்வி. சி. சிவசம்பு, இராமநாதன் விடுதியில் சந்திக்கவும்.

-- அதிபர்

[7187]


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் 42, 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள ஜனதா ஹோட்டல் மீண்டும் வாடிக்கையாளருக்காக திறக்கப்பட்டுள்ளது.

ஜனதா ஹோட்டல்
42, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்

(7188)


அடையாள அட்டை

## தவறிவிட்டது

I. C. No. 29120774V, பலாலி வீதி, கோண்டாவிலில் வசிக்கும் கனகசுந்தரி ஞானசுந்தரம் 8- 10- 88இல் பெருமாள் கோவிலில் தவறவிட்டு விட்டார். கண்டெடுப்பவர் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### புரட்டாதிச் சனியும் நவராத்திரி கோலுவும் ஒரே தினத்தில் அமைவது ஓர் அருமையான சந்திப்பாகும்

சனீஸ்வரன் நவக்கிரகங்களில் பிரதானமான ஒருவர். மகாவிஷ்ணுவின் மைந்தனுக் கொப்பானவர்.

மகாவிஷ்ணுவின் கட்டுப்பாட்டிற்கமைவாகவே நவக்கிரகங்கள் இயங்குகின்றன.

மானிடர் யாருக்குப் பயப்படாவிடினும் சனீஸ்வரனுடைய பார்வையைக் கண்டஞ்சுவர்.

இவரின் கொடிய பார்வையைத் தவிர்க்கும் நோக்கமாகச் சனிவாரங்களில் எள்ளெண்ணெய் எரித்து அவரைச் சாந்தப்படுத்துவர்.

சனிவாரங்களில் புரட்டாதி மாதத்துச் சனி வாரங்கள் தான் சனீஸ்வரனுக்கு மிகவும் பிரீதியானவை.

எல்லாப் பெரிய தேவாலயங்களிலும் நவக்கிரகங்களுக்குத் தனியாகக் கோயில் அமைத்துள்ளார்கள்.

எனினும் மகா விஷ்ணு கோயிலில் அமைந்துள்ள நவக்கிரகங்களுக்குச் சக்தியும் சிறப்பும் கூடுதலானவை என்பது பிரசித்தம்.

எனவே, புரட்டாதிச் சனிவாரங்களில் விஷ்ணு கோயிலாம் பெருமாள் கோயிலுக்குப் பக்தர்கள் போய் எள்ளெண்ணெய் எரித்து அதனாற் கூடிய பலனைப் பெறுவர்.

வண்ணார்பண்ணை கிழக்கில் அமைந்துள்ள ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் புரட்டாதி மாதத்துக் கடைசிச் சனிவாரம் ஒரு பிரதானமான விசேட தினமாகும்.

அன்று கோடானு கோடிப் பக்தர்கள் திரண்டு சென்று ஸ்ரீமத்நாராயணனைத் தரிசித்து அவனருளைப் பெறுவதுடன் அக்கோயிலில் அமைந்துள்ள சனீஸ்வரனுக்கும் சுத்தமான எள்ளுடன் நல்லெண்ணெய் எரித்துப் பிரீதி செய்து சனீஸ்வரனால் ஏற்படக்கூடிய தீமைகள் நீங்கப்பெற்று நற்பலனையும் அடைவர்.

நவராத்திரி நாயகிகளாகிய மகாலட்சுமி, துர்க்காதேவி, சரஸ்வதி ஆகிய மூவருக்கும் புரட்டாதி மாதத்தில் வரும் கொலு பிரதானமானது. ஒன்பது தினங்களில் இம் மூன்று தேவிகளையும் வணங்கிப் பூசித்து நற்பலன்களை அடைகின்றோர்.

இவ்வருடம் புரட்டாதி மாதக் கடைசிச்சனி வாரம், இந்த ஒன்பது தினங்களில் ஒரு தினமாக வருகிறது.

இப்படிப் புரட்டாதிச் சனிவாரமும் நவராத்திரிக் கொலுவும் ஒரே தினத்தில் அமைவது ஒரு சிறப்பான அருமையான சந்திப்பாகும்.

இந்த நற்சந்திப்பு அநேகமாக நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஏற்படுகிறது.

ஆகவே நாமெலலோரும் இந்தப் பிரதானமான தினத்தைத் தவறவிடாது சனீஸ்வரனுக்கு எள்ளெண்ணெய் எரித்துப் பிரீதி செய்வதுடன் நவராத்திரி நாயகிகளையும் பிரார்த்தித்து வணங்கி நற்பலன்களை அடைவோமாக.

— சி. சி. குமாரசவாமி

# வடக்கு - கிழக்குப் பகுதிகள் ஸ்ரீலங்கா அரசபடைகளின் ஆட்சியின் கீழ் மீண்டும் வரக்கூடாது

## இலங்கை ஆசிரியர்கள் சங்கம் நிறைவேற்றிய தீர்மானம்

கொழும்பு, அக். 13

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்த இந்திய- அமைதிப் படையினரை யூ. என். பி. அரசு வாபஸ் பெற வேண்டும். அதே சமயம் வடக்குக் கிழக்குப் பகுதிகளை மீண்டும் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வரக்கூடாது. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர்களின் பிரச்சினை இராணுவரீதியில் அல்லாத முறையில் தீர்க்கப் படவேண்டும். தென்பகுதியில் இருந்தும் ஆயுதப்படையினர் வாபஸ் பெறப்படவேண்டும்.

இலங்கை ஆசிரியர்கள் சங்க மத்திய கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமித்திய விடுத்த அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்கள் மத்தியிலும் தொழிலாளர் வர்க்கத்தினர் மத்தியிலும் இலங்கை ஆசிரியர் சங்கம் மேற்கூறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் ஓர் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

கடந்த சில வாரங்களாக இலங்கை முழுவதிலும் உள்ள பல்கலைக்கழக மாணவர்களும் பாடசாலை மாணவர்களும் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சில இடங்களில் பொலீஸாரும் ஆயுதப் படையினரும் சுட்டதினால் சில மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

அரசாங்கத்தின் கொலை செய்யும் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த நிலைமைக்காக கல்வி மந்திரி பாடசாலை ஆசிரியர்களிலும் அதிபர்களிலும் குற்றம் காண முயன்றுள்ளார்.

ஸ்ரீலங்காவில் உள்ள பாடசாலைகளில் நிலவும் முகாமைத்துவத் தவறுகளினாலும் ஊழல்களினாலும் இந்த நிலைமை எழுந்தது.

சென்ற 11 ஆண்டுகளாக பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் யூ. என். பி. அரசாங்கத்தின் தன்னதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

ஒவ்வொரு பாடசாலையும் அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தப் பட்டன. யு.என்.பியின் வால்பிடிகாரருக்கே அதிபர்கள் பதவிவழங்கப்பட்டது. ஒவ்வொரு பாடசாலையிலும் யு என். பி மாணவர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. கிட்டத்தட்ட பத்தாயிரம் பாடசாலைகள் யு. என். பி கிளைகளாகப் பாவிக்கப்பட்டன.

இதன் காரணமாக கல்வித்தரம் பொதுவாகக் குறைவடைந்தது. யு. என். பி. மாணவர் சங்கமான சமவாதி சிஷ்ய சங்கமாய ஆசிரியர்களுக்குக் கூட கட்டளைகள் பிறப்பிக்க முற்பட்டது.

ஆகவே கல்வி அமைச்சர் ஆசிரியர்களிலும் மாணவர்களிலும் குற்றம் சாட்டுவது சிறுபிள்ளைத்தனமல்லவா?

இப்பொழுது எல்லாமே தோல்வி கண்டுவிட்டன. ஆகவே நாங்கள் இந்த அரசாங்கத்தை இராஜினாமாச் செய்து மக்களை ஒரு புதிய நாடாளுமன்றத்தையும் ஆணுசிபதியையும் தெரிவு செய்ய வழிசெய்யும்படி கோருகிறோம்.

இப்படித் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ச)

## வடபகுதிக் காசோலைகள் கொழும்பில் கையாடல்

சரவெட்டி, அக். 13

வடபகுதியில் உள்ளவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் காசோலைகள் கொழும்பிலுள்ள சில வங்கிகளில கையாடப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

வடபகுதியில் இருந்து பலர் கொழும்பிலுள்ள [illegible] குற்றப் பிரிவு புலனாய்வுக் குழுவுக்கும், தபால மா அதிபருக்கும் இது தொடர்பாக முறையீடு செய்துள்ளனர்.

கோடிடப்பட்ட்டு வரும் காசோலைகள்கூட உரியவர்களுக்குக் கிடைக்காது. கொழும்பில் உள்ள சிலருக்குக் கிடைப்பதற்கம்- வங்கிகளில் அவர்கள் அதை மாற்றுவதற்கும் சடமையாற்றும் சில ஊழியரும் உடந்தையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சரவெட்டித் தபால் நிலைய ஓய்வுபெற்ற ஊழியர் திரு கே தபைாலசிங்கம் என்பவரும் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் ஆவார்.

சுமார் 44ஆயிரம்ரூபா இலங்கைப் பணத்தை தாம் இழந்துவிட்டதாகவும், விசேஷ குற்றப் பிரிவு புலனாய்வுத் துறைக்கும், தபால் மா அதிபருக்கும் இது தொடர்பாக முறையிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ- 70)

### ஆங்கிலத்தை உதாசீனம் செய்ததால்

## மாணவர்கள் கண்இருந்தும் குருடராக தத்தளிக்கின்றனர்

### ஸ்கந்தா பரிசளிப்பு விழாவில் உரை

சுன்னாகம், அக் 13

இலங்கையில் கல்வி சற்றேறர் வீதம் உயர்ந்துள்ளபோதிலும் ஆங்கிலத்தை உதாசீனம் செய்ததன் பயனாக எமது மாணவர்கள் கண் இருந்தும் குருடர்கள்போன்ற நிலையில் தத்தளிப்பதை எவரும் மறுக்க முடியாது. ஆங்கில மொழியின் உதவியின்றி கலை, விஞ்ஞான வர்த்தகம் போன்ற எந்தப் படிப்பிலும் முன்னேற முடியாது.

30 ஆண்டுகளாக ஆங்கிலத்தைப் புறக்கணித்ததனால் ஏற்பட்ட விளைவுகளைத் தெரிந்த பின்பும், சீர்செய்ய எவரும் முன்வராதது மிகவும் துரதிர்ஷ்டமானதே.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் 'தாபகர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும்' வைபவத்தில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பேராசிரியர் திரு. திரு. தில்லைநாதன் மேற் கண்டவாறு கூறினார்.

ஸ்கந்தா அதிபர் திரு பொன். நாகரத்தினம் தலைமையில் நடந்தவிழாவில் பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

கல்வித் திட்டங்களைத் திட்டமிடுதல் ஏறக்குறைய முழுமையாக அரசியல் வாதிகளினதும் — அதிகாரிகளினதும் கையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அவர்களில் பலருக்கு கற்பித்தலோடும் ஆசிரியரோடும், விரைந்து வளர்ச்சிபெறும் கல்வித் துறையோடும் உள்ள தொடர்பு ஒரு வரையறைக்குட்பட்டதே.

எனவேதான் கல்வியின்பயனைச் சகலபிரசைகளும் உண்மையாகவே அனுபவிக்க வேண்டும் என விரும்புவர்கள் உடனடியாகப் பல சீர்திருத்தங்களை அரசியல் லாபம் கருதாது—செய்ய வேண்டும்.

இதுவே எமது சந்ததியினருக்கு நம் செய்யக் கூடிய பெரும் பேறாகும், எனக் கூறினார்

தாபகர் நினைவுரை வழங்கிய சட்டத்தரணி திரு ப. அரவிந்தன் பேசுகையில், 'சமுதாய [illegible] வேலை வாய்ப்புகளுக் [illegible] சியமாயிருந்த காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் செலவாக்குமிக்க வேளையில் நமது பிள்ளைகள் நம் இயல்பான சூழலில் கல்வி கற்பிக்க வேண்டுமெனக் கந்தையா உபாத்தியாயர், திரு. இராசரட்ணம் போன்ற பெரியார்கள் தூரிய நோக்குடனும் திடசிந்தையுடனும் பல பாடசாலைகளை அமைத்தனர்.

கந்தையா உபாத்தியாயர் மறைந்து முப்பத்தாறு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன,

எனினும் 1894 ஆம் ஆண்டு குடிசையில் ஆங்கில பாடசாலையாகஆரம்பிக்கப்பட்ட ஸ்கந்தாவை நிறுவிய கந்தையா உபாத்தியாயரின் பெயர் ஸ்கந்தா உள்ளவரையும் மாழுது – மறையாது' எனக் கூறினார்.

அதிபர் திரு பொன். நாகரத்தினம் தமது தலைமையுரையில் கல்லூரியின் வளர்ச்சிபற்றி விவரித்துக் கூறினார்.

[illegible] த. சுமணதேவி நன்றி [illegible]

(சி-27)

## புலமைப் பரிசில் பெறும் மாணவி

பருத்தித்துறை, அக். 13

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரியில் ஜீ சி.ஈ. உயர்தர வகுப்பில் கூடிய புள்ளிகள் பெற்று முதல் தரமாக சித்திபெய்தி பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் மாணவிக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான சால ஒழுங்குகளையும் அமெரிக்காவில் 109 ஆ ஆட் அவன் யூவில்வதியும் திரு ஜெ. எம். இராசட்ணம் தம்பதிகள் செய்துள்ளனர்.

இப் புலமைப் பரிசில் 'இராசம்பா மயில்வாகனம்' நினைவாக வருடம் தோறும் வழங்கப்படும்.

1986/1987 ஆண்டுக்குரிய புலமைப் பரிசில் சற்போது யாழ் மருத்துவபீடத்தில் இரண்டாம் ஆண்டு கல்வி கற்கும் செல்வி உமா கௌரி சரவண முத்துவுக்குக் கிடைத்துள்ளது என கல்லூரி அதிபர் திருமதி லீல வதி சந்திர சேகரர் தெரிவித்துள்ளார். (இ-118)


ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுக்கான

★ போட்டிப்பரீட்சை ★

நவம்பர் 12ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

1மாத துரித பயிற்சி வகுப்புக்கள்

"யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்கள் இணைந்த சேவை"

திரு. T. N. பஞ்சாட்சரம் திரு. S. மூர்த்தி திரு. K. சபாநாயகம்

பாடநெறி:
1. Comprehension
2. Knowledge of Language
3. Integrated Skills
4. Writing Skills

ஆரம்பம்: 15 - 10 - 88 பிற்பகல் 1-00 மணி

- இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
- பரீட்சைக்குரிய வினா - விடைப்பயிற்சிகள்

வகுப்புக்கள்:- சனி, ஞாயிறு — விடுமுறை தினங்களில் பிற்பகல் 1-00 மணிமுதல் 4-00 மணி வரை

நடைபெறும் இடம்:- அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் (கிளை) 01/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கட்டணம்: ரூபா 150. 00


குறிப்பு:- விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
166 1, Hospital Road, - JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளைக் கட்டிடம் 1ஆம் மாடி) (C-563)



புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை ரூபா 68/55 125 கிறும்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



சரியான நிறை தவறுது காட்டும் யூனியன் மேடைத் தராசுகளை சிங்கர் விநியோகிக்கிறது!



யூனியன், சரியான நிறையைத் தவறுது காட்டுபவை. உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் நிறுவனம் இந்த உன்னத தராசுகளின் ஏக விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ளது.

யூனியன் 250 கிலோ மேடைத் தராசுகள் இப்பொழுது மேலும் நவீனத்துவம் பெற்றுள்ளன. வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் நுட்ப உறுப்புகளும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் கொண்ட அவை இலங்கை அளவை நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரையைப் பெற்றவை.

சகல சிங்கர் விற்பனை நிலையங்களிலும் வாங்கலாம்.

எடை அளவெல்லை

அளவுத் திறன் 250 கி.கி. அளவுக் கூறுகள் 10 கி. கி x 100 கி.

நீங்கள் தவணைக் கொடுப்பனவு அடிப்படையிலும் வாங்கலாம்.

விவசாயப் பிரிவு சிங்கர்* மாசற்ற மேன்மை

விலை: ரு. 11,215/-

Minds/SA/5

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடாங்கலானது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

**A/L 89**

DAY CLASSES

| | |
|---|---|
| பொருளியல் | — குமாரவேல் |
| கணக்கியல் | — ஸ்ரீ |
| வர்த்தகம் | — தேவா |
| அளவையியல் | — சயந்தன் |
| தமிழ் | — குழந்தை |
| இந்துநாகரிகம் | — அருள்நங்கை |

(C/576)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நாகலிங்கம் சுப்பிரமணியம்

மலர்வு: 30 12 1914 — உதிர்வு: 26 09 1987

திதி - 13-10-1988

அன்பின் ஐயா!
நீண்ட துயில் கொண்டு
ஆண்டு ஒன்றாயினும்
தூண்டா மணிச்சுடராய்
ஒளிர்கின்றீர் எம் முன்னே
கூண்டைப் பிரிந்த
உங்கள் ஆத்மா சாந்தி பெற
வேண்டித் துதிக்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயருறும்!

89/2 பலாலி வீதி, கந்தர்மடம். — மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(6896)



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி சுசீலாதேவி தாமோதரம்பிள்ளை

ஆண்டவன் படைப்பு: 27-01-1954 — அநியாய அழிப்பு: 13-10-1987

அன்பின் திருவுருவே!
அறிவின் சுடரொளியே!
பண்பின் பிறப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!
பாசமலராய் மலர்ந்து மணம் பரப்பி
நேசமுள்ள குடும்பத்தில் ஒளி பரப்பி
விதியின் விளைவுக்குத் துணை போனாயோ?
சதியின் செயலுக்கும் பலியானாயோ?
பாதை தெரிந்ததென்று
பயணம் சென்றாயோ
பேதை அன்னை ஏங்குவதை
நீயும் பாராயோ?
இப்பிறப்பில் உன்னை நாம்
என்று காண்போமோ?
எப்பிறப்பில் உன்னுடன் இனி
சேர்ந்து வாழ்வோமோ?
உனது ஆத்மா சாந்திபெற தினமும்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

Mr & Mrs Thamotharampillai
No 133 Port - c
26 Rue Regnault
75013 - Paris
France

தந்தை, தாய், சகோதரர், சகோதரிகள், மைத்துனர்மார், அண்ணிமார், மக்கள், மருமக்கள்.

"சிவகுடில்"
கே. கே. எஸ். வீதி
கொக்குவில்.

(7183)


## இடைக்காடு பகுதியில் சமீபத்தில் 4 பேர் கொலை

அச்சுவேலி, அக் 13

இடைக்காடு பகுதியில் சமீபத்தில் நான்கு பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இராசையா சாமி (வயது 36) என்பவர் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவும் -

எஸ் சிவசுப்பிரமணியம் (வயது 42) க. வேல்முருகு (வயது 45) ஆகியோர் 5 ஆம் திகதி புதன்கிழமை இரவும் விடுகளில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

3 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் காணாமல் போய் இருந்த சிவலிங்கம் சிவஅழகன் (வயது 22) என்பவரது சடலம் அழுகியநிலையில் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பற்றை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது. [இ-11]

# ஓய்வூதியருக்கு ஒதுக்கிய பணம் மாகாண சபைக்கு

கொழும்பு, அக். 13

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வாழ்க்கைச்செலவுப்புள்ளிக்கான பணத்தை வழங்க போதிய நிதி இல்லை என்று ஓய்வூதியத் திணைக்களப் பிரதி இயக்குநர் ஒஸ்டின்ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடந்த 128 ஓய்வூதியர்கள் சங்கங்களின இணைப்புக்கூட்டத்தில் அவர் பேசினார்.

மாகாண சபைகள் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அரசு செலவழித்த பணம் பென்ஷனியர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே பெறப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ)

## காலபோக வேளாண்மை

இவ்வாரம் பெய்த மழையைத் தொடர்ந்து தென்மராட்சி கிழக்குப் பகுதியான வரணி, நாவற்காடு குடமியன் கிராமங்களிலுள்ள விவசாயிகள் கால போக வேளாண்மைக்கான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-75)

## மினி சினிமா சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், அக் 13

சடந்த 10 ஆம் திகதி யாழ் மாவட்ட மினி சினிமா சங்கத்தால் நடத்தப்படவிருந்த விசேஷ பொதுக்கூட்டம் அன்றைய தினம் இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாக பின்போடப்பட்டது.

இந்தப் பொதுகூட்டம் நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் 162, கஸ்தூரியார் வீதியில் மினி சினிமா சங்கத் தலைமைச் செயலகத்தில் நடைபெறும். [இ-9]

### ஆண்டு 1–3 ஆசிரியர்களுக்கான
## சேவைக்காலப் பயிற்சி

சுன்னாகம் அக் 13

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் ஆண்டுஒன்று தொடக்கம்ஆண்டுமூன்று வரையும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி நெறி நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து 24ஆம்திகதி வரை நடத்தப்படும்.

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் மேற்படி வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்யர்கள்தமக்கு வசதியான நிலையங்களில் கலந்து கொள்ளும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் வட்டாரம் நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. பின்வரும்கல்வி வட்டாரங்களில் பயிற்சி நெறிகள் கீழ்க்காணும் திகதிகளிலும், இடங்களிலும் நடைபெறும்.

யாழ்ப்பாண வட்டாரம் இன்று யாழ் மத்திய கல்லூரியில்

கோப்பாய் வட்டாரம் 14-10-88 இல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்

வேலணை வட்டாரம் 15-10-88 இல் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில்

புங்குடுதீவு வட்டாரம் 17-10-88 இல் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில

வட்டுக்கோட்டை வட்டாரம் 18 10-88 இல் விக்ரோறியாக் கல்லூரியில்

காங்கேசன்துறை வட்டாரம் 19-10-88 இல் இராமநாதன்மகளிர்கல்லூரியில்

மானிப்பாய் வட்டாரம் 20-10-88 இல்மானிப்பாய் இந்துக் கல்லூரியில்

உடுப்பிட்டி வட்டாரம் 21-10-88 இல் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில்

பருத்தித்துறை வட்டாரம் 22-10-88 இல் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில்

சாவகச்சேரிவட்டாரம் 24-10-88 இல்றிபக் கல்லூரியில்.

(ச-27)

# பளை மகாவித்தியலயாத்தில் தேசிய சாரணர் வாரம்

கொடிகாமம் அக். 13

பளை மகாவித்தியாலய சாரணர் குழுவின் தேசிய சாரணர் வாரத்தின் முதல் நாள் நிகழ்ச்சி மரம் நடும் விழாவாகக் கொண்டாப்பட்டது.

சாரண அணித்தலைவர்களின் வீட்டுக்கு முன் உள்ள காணிகளின் பனம் விதைகள் நடப்பட்டன.

சாரணர்களின் ஒரு பகுதியினர் தம்பகாமத்தில் பனம் விதைகளை தொடர்ச்சியாக நட்டனர்.

அன்றைய நிகழ்ச்சிக்கு வனபரிபாலன உத்தியோகத்தர் திரு. ஆர். ஏ செபஸ்தியான் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்

பனம் விதை நடும் விழா வித்தியாலய துணை அதிபர் திரு. அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் சமய நிகழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டன.

காலை நிகழ்ச்சிக்கு வண. பிதா கிறிஸ்ரி செல்வராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

பாசறை அமைக்கப்பட்டு பூரண கும்பம் வைத்து பூஜை நடைபெற்றது.

அன்றுமாலை குழுவினர் கோயில் வழிபாட்டில் கலந்து கோயில் வீதியைச் சுத்தம் செய்தனர்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. கே கே பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நான்காம் நாள் நிகழ்ச்சிக்கு உதவி மாவட்ட ஆணையாளர் திரு. வி. குணரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சாரணர்களுக்கு பாசறை தீ நிகழ்ச்சி நடத்தப்பட்டது

இதில் 200 சாரணர்கள் கலந்து கொண்டனர். (ச- 75)

# கல்வியுடன் ஒழுக்கத்தையும் தவறாது போதியுங்கள்

யாழ்ப்பாணம், அக். 13

இங்கு தற்பொழுது நடந்து முடிந்த இந்தப் பயிற்சி நெறியில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயிலுநர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறான ஒரு பயிற்சி வடமாகாணத்திற்கே பொதுவானதாக இங்கு நடைபெறுவது வரவேற்கப்படக் கூடியதாகும் இங்கு பயிற்சி பெற்று வெளிபேறும் நீங்கள் தியாகம், சேவைக்கு அர்ப்பணம், நல்லொழுக்கம் ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டு சேவையாற்ற வேண்டும்,

அதேவேளையில் மாணவர்களுககு கல்வியுடன், நல்லொழுக்கத்தையும் தவறாது போதிக்கவேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்களில் இரண்டாவது குழுவினரின் பயிற்சி நெறியை முடித்துவைத்துப் பேசிய கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகிய இரண்டாவது குழுவினருக்கான பயிற்சி நெறி செவ்வாய் வரை யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

### ஆரம்ப ஆசிரியர் மத்தியில் கல்விப் பணிப்பாளா உரை

108 ஆரம்ப ஆசிரியர்கள் பயிற்சி நெறியில் கலந்துகொண்டனர்.

அவர்கள் அனைவருக்கும் நேற்று பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த விழாவில்பயிற்சியில் கலந்துகொண்டவர்களை உள்ளடக்கிய ஆசிரியர் சேவை முன் பயிற்சிப் பயிலுநர் கழகம் 'தியாக தீபம்' என்ற சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டது.

கவிஞர் முருகையன் வெளியிட்ட இந்த சஞ்சிகையின்முதல்பிரதியை கல்விப் பணிப்பாளர் பெற்றுக்கொண்டார்.

இந்த விழா முடிவடைய நேற்றுபிற்பகல் 6-30 மணியாகியதை அடுத்து பயிலுநர்கள் அனைவரும் பிரஸ்தாப வித்தியாலயத்திலேயே தங்கி இன்று தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர். [அ-9]

## புதிய விரிவுரையாளர்

அச்சுவேலி, அக் 13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக திரு. ஏ. கே. குணசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. குணசிங்கம் யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியல் புலத்தின் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

திரு. குணசிங்கம் அக்டோபர் முதலாம் திகதி பதவி ஏற்றார். (இ-11)


## 3 ஆம் மாத நினைவஞ்சலி



செல்வி கலாமோகினி சண்முகநாதன் (சின்னராசா) (கலா)

தாயின் மடியில்: 1964-06-19 — அண்ணன் திருவடியில்: 1988 07-13

என்றும் உன் நினைவால் கண்ணீர் சிந்தும்:
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், அத்தான் அகிலன் மற்றும் உறவினர்கள், நண்பிகள்.

நா. சண்முகநாதன்,
பெற்றோல் செற்றடி,
மானிப்பாய்.

(7184)



**ஸ்கந்தஷஷ்டி - சூரசம்ஹார தினத்தில் - திருச்செந்தூரில்**

156 ஆவது தென் இந்திய சமய சரித்திர கலாசார யாத்திரைச் சுற்றுலா
திருச்செந்தூர் - மதுரை - மட்ராஸ் - திருப்பதி - மைசூர் - பெங்களூர்
10-11-88 தொடக்கம் 16 நாட்கள்

விபரங்களுக்கு: ராஜா ரூர்ஸ், 168/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
அதிபர்: வி. அமிர்தேஸ்வரராஜா (சமாதான நீதிவான்) (7148)


# முத்தரப்பினரும் சேர்ந்து நடத்தும் போராட்டம்

## கணேஸ் அறிவாலய திறப்பு விழாவில் உரை

சரவெட்டி அக 13

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இளைஞர்கள், முதியோர்கள், சிறுவர்கள் ஆகிய முத்தரப்பினரும் சேர்ந்து போரிடுவதால் வெகு விரைவில் தமிழீழம் மலரும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

தமிழ் ஈழமக்கள் மன்றததலைவர் திரு. எஸ். சிவானந்தசுந்தரம் கணேஸ் அறிவாலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

வடமாராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவத்திற்கு ஓய்வு பெற்ற அதிபர் திரு எஸ். தாமோதரம்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. சிவானந்தசுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில், விடுதலைப் போராட்டம் கூர்மை அடையும் நேரங்களில் எல்லாம் ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள், என்பவற்றின் மூலம் அதனை மழுங்கடிக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

தற்போதும் இதுவே நடைபெறுகிறது.

இன்றைய போராட்டத்தில் ஒவ்வொரு வீரரும் தமிழ் மக்களால் [illegible] கள் போற்றப்படுகின்றார்கள். இந்த நூல் நிலையம் கூட மறைந்த ஒரு போராளியின் நினைவால் ஆரம்பிக்கப்பட்டது' என்றார்.

திரு நவரத்தினம், திரு எஸ். யோகராஜா, மன்னவன் கந்தப்பு, திருமதி சுந்தரலிங்கம், திரு. கலாதரன் திரு. ரகுநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

மாணவர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர் செல்வன் கே. வடிவேற்கரசன் நன்றி [illegible]. (இ-70)


## புதிய தொழிற் பயிற்சி நெறிகள்

- Radio T. V. & Deck
- Air Condition & Refrigeration
- Motor Winding
- House Wiring

செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய துரித வகுப்புகள்

இவற்றுடன்

தொழில் நுட்பத்துறையில் London தராதரத்திற்குரிய City & Guilds (சகல பிரிவுகளும்) வகுப்புக்களும்

ஆரம்பம்: 15. 10. 1988

உங்கள் பதிவுகட்கு:

**North Ceylon Technical Institute**
14, St. Peter's Lane,
JAFFNA.

(C/583)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

**பொருள்:**

நட்பைப்போல் செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன? அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன?


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல. 298/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
13-10-1988 உ பெ இல. 83


## எய்ட்ஸ் ஆபத்து

யாழ்ப்பாணக் குடாநாட்டின் முதலாவது எய்ட்ஸ் நோயாளி மரணமாகி விட்டார். அதன் காரணமாக, உலகை இன்னல்படுத்தி வரும் எய்ட்ஸ் தமிழ்ப் பகுதிகளையும் ஆட்கொண்டுவிட்டது என்பதுதான்! உலகின் பல நாடுகளையும், பிரதேசங்களையும், பகுதிகளையும் பயமுறுத்திவரும் பயங்கர எய்ட்ஸ் எமது பகுதிக்கும் வந்துவிட்டது- நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

உலகளாவிய ரீதியில், ஆயுதங்களுக்கு அடுத்ததாக மனித குலத்தைப் பயமுறுத்தி நிற்பது எய்ட்ஸ் எனலாம். அணு ஆயுதம் மனிதன் பிரயோகப்படுத்தினுல்தான் உலகை அழிக்கும். ஆனால் எய்ட்ஸோ மனிதனுக்குத் தெரியாமலே பரவி அவனது குலத்தைப் பூண்டோடு அழிக்கக் கூடிய பேராபத்து நிறைந்ததாகும்.

சர்வதேசங்களும் இப்போது எய்ட்ஸுடன் போராடி வருகின்றன. பொருளாதார அரசியல், சமூகப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கு முன்னர், எய்ட்ஸ் ஆபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய அவசியம் இப்போது எல்லாநாட்டு அரசுகளுக்கும் உண்டாகிஇருக்கிறது.

எய்ட்ஸ், குறிப்பாக அபிவிருத்தி அடைந்த மேலைநாடுகளில் பூதாகாரமான சமூகப்பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளது. பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் அரசியலை ஆட்டிப் படைக்கும் விவகாரமாகக்கூட எய்ட்ஸ் மாறிஉள்ளது. அரசியல் சர்ச்சைகள், போட்டிகளுக்கும் அது காலாகி நிற்கிறது.

எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. விஞ்ஞானம் மலையளவு வளர்ந்த போதிலும் எய்ட்ஸைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்தை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் எய்ட்ஸ் ஆட்கொல்லி ஆகிவிட்டது.

நோய்க் கிருமிகள், மற்றும் உடல் தாக்கங்களை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தியை எய்ட்ஸ்வைரஸ் உடலிலிருந்துமுற்றாகஅழித்துவிடுகிறது. அதனால் எய்ட்ஸ் கண்ட ஒருவரை எந்தநோயும் எந்தநேரமும் தாக்கக்கூடிய வாய்ப்பு உண்டாகிறது. பல கொடிய நோய்கள், ஒரேநேரத்தில், எய்ட்ஸ் கண்டவரின் உடம்பைத் தாக்கும்போது நிலைமை பயங்கரமாகிவிடுகிறது. ஈற்றில் மரணமே சம்பவிக்கிறது.

எய்ட்ஸ் நோய் தொற்று நோயாக இருப்பதால், அந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்திச் சிகிச்சை அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதனால் அந்த நோய் கண்டவர்கள் சமூக நீரோட்டத்தில் இருந்து ஒதுக்கப்படுகிறார்கள். விளைவு: பல சமூகப் பிரச்சினைகள் எழுகின்றன.

எய்ட்ஸ் நோய்க்கு ஆளானவர்களை வைத்தியத் தேவைக்கு தனிமைப்படுத்தி வைத்தாலும், மனிதாபிமான ரீதியில் அவர்களை சமூக உறவில இருந்து பிரிக்கமுடியாத ஒரு நிலையும் தோன்றுகிறது.

எனவே எய்ட்ஸ் என்பது பன்முகப்பட்ட பிரச்சினைகளை அடக்கிய சிக்கல் நிறைந்த பயங்கர விவகாரம் எனலாம்.

ஏற்கனவே அரசியல், பொருளாதார, சமூகத்துறைகளில் பல பாதிப்புகளை அனுபவித்து நொந்து போயிருக்கும் ஈழத் தமிழர் மத்தியில் எய்ட்ஸும் தலைதூக்குமானால், அவர்களால் ஈடுகொடுக்க முடியாமல் போகும்.

அரசியல் ஸ்திரமும், நிதி வளமும், வல்லமையும் பொருந்திய பெரும் நாடுகளுக்கே ஒரு சவாலாக உருவெடுத்திருக்கும் எய்ட்ஸ் எமது மண்ணில் பரவத் தொடங்கினுல் தமிழர் கதி அதோ கதி தான்.

ஆகையால் எய்ட்ஸ் இங்கு பரவாது தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இன்று ஒருவராக இருப்பது ஒரு மாதத்தில் பத்தாகிப் பல்கிப் பெருக இடங் கொடுக்கக் கூடாது. முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

அதற்குச் சுகாதாரப் பகுதியினர், தொண்டர் ஸ்தாபனங்கள், வைத்திய சமூகத்தினர், மக்கள் ஆகிய நான்கு தரப்பினரும் ஒன்றிணைந்து மனப்பூர்வமாக, தமக்கு வந்த ஆபத்தாகக் கருதச் செயற்பட வேண்டும்.

எய்ட்ஸின் ஆபத்தை, அதன் பயங்கரத்தை அதனால் ஏற்படக்கூடிய பல தரப்பட்ட தாக்கங்களை மக்களுக்குச் சரியாக விளக்குவதும், அதிலிருந்து தப்புவதற்குத் தடுப்பு நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பதை எடுத்துச் சொல்வதுமே முதற்பணியாக இருக்க வேண்டும்.

வெளிநாட்டுச் சஞ்சிகை தகவல்:

# இந்திய விமானப்படையிடம் அணுக்குண்டு!

## புதுடில்லி அரசு மறுப்பு

புதுடில்லி, அக் 12

இந்திய விமானப் படையிடம் அணுக்குண்டுகள் வழங்கப்பட்டுள்ளன என்று வெளிநாட்டுச்சஞ்சிகையொன்று வெளியிட்ட தகவல் பிழையானது என்று இந்திய அரசு மறுத்துள்ளது

லண்டனிலிருந்து வெளிவரும்'பாதுகாப்பு-வெளிவிவகார வாராந்திரி' சஞ்சிகையே இத்தகவலை வெளியிட்டது.

விமானப்படை விமானங்களுக்கு அணுக்குண்டுகளை விநியோகிப்பது பற்றிய ஒழுங்குகளைக் கவனிக்க இந்திய விமானப்படை அலுவலகத்தில் தனிப்பிரிவு ஒன்று இயங்குகின்றது என்றும் அச்சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது

இத்தகவல் அரசியல் உள்நோக்கங்களுடன் வெளியிடப் பட்டுள்ளது என்று கூறிய இந்திய அரசு, இந்தியாவிடம் அணு ஆயுதங்கள், குண்டுகளே கிடையாதென்று திட்டவட்டமாக மறுத்திருக்கிறது. (எ)

### ஜப்பான் மன்னர் ஆபத்தான நிலையில்

டோக்கியோ, அக் 11

ஜப்பானியச் சக்கரவர்த்திஹிரோஹிட்டோ மீண்டும் கடும் சுகயீனத்துக்காளாகியிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## ஐ.நா வில் இந்திமொழியில் அமைச்சர் ராவ் பேச்சு

ஐ நா அக் 12

இந்திய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ், ஐ நா பொதுச் சபைக் கூட்டத்தில்இந்திமொழியில் பேசினார்.

அவரின் பேச்சை இந்திய ராஜதந்திரி ஒருவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

ஐ நா சபையின் 43 வருட சரித்திரத்தில் இந்தி மொழியில் உரை நிகழ்த்தப்பட்டது இது மூன்றுவதுமுறையாகும்.

ஜனதா ஆட்சியில் வெளியுறவு அமைச்சராக இருந்த திரு அடல் பிஹாரி வாஜ்பாய் 1977 இலும், 1983 இலும் ஐ. நா வில் இந்தியில்பேசினார்.

திரு. நரசிம்மராவ் கடந்த வாரம் இந்தியில் பேசிய போது இந்தியத் தூதுக்குழுவில் ஓர் உறுப்பினராகச் சென்ற திரு. வாஜ்பாய் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

திரு ராவ்பேசிமுடித்த பின்னர்,

''இந்தியில் பேசிய திரு. ராவைப் பாராட்டுகிறேன்'' —என்று சொன்னார்.

ஐ நா வின்உத்தியோக மொழிகள் ஆறு. அவை யாவன;

ஆங்கிலம், ஸ்பானிஷ், அரபு ரஷ்யன், பிரெஞ்சு, சீன மொழிகளே அவை.

திரு ராவ் ஒரு தெலுங்கர். 1984 தேர்தலில் இவர் ஆந்திர மாநிலத்திலும், மகாராஷ்டிர மாநிலத்திலும் போட்டியிட்டார். ஆனால் மகாராஷ்டிரத்தில் இருந்தே நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆந்திர மாநிலத்தில் தோல்வியுற்றார். (எ)

### முற்றுகை நீக்கம்

அல்ஜியர்ஸ், அக். 12

அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜியர்ஸில் கடந்த வாரம் போடப்பட்ட இராணுவ முற்றுகை நேற்று அகற்றப்பட்டது.

விலைவாசி உயர்வை எதிர்த்து அல்ஜீரியாவின் பல பகுதிகளில் அரசு எதிர்ப்புக்கிளர்ச்சி ஆரம்பித்ததைத் தொடர்ந்து இந்த முற்றுகை போடப்பட்டது. (எ)

## ராமஜன்ம பூமி பிரச்சினை மீண்டும் தீவிரமடைகிறது!

புதுடில்லி, அக் 12

ராமஜன்மபூமி பிரச்சினை மீண்டும் இந்தியாவில் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் அயோத்தி என்னும் இடத்தில் ராமஜன்ம பூமி அமைந்துள்ளது.

அந்த இடத்தில் முஸ்லிம் பள்ளிவாசல் தற்சமயம் அமைந்துள்ளது. அந்த இடம்தான் ராமபிரான் அவதரித்த இடம் என்று இந்துக்கள் கருதி வருகிறார்கள்.

அந்த இடத்தில் உள்ள பாபரி மசூதியை அகற்றி ராமர் ஆலயம் கட்ட அனுமதிக்கப்பட வேண்டும் என்று இந்துக்கள் கோரி வருகின்றார்கள்

முஸ்லிம் மதப் பிரமுகர்கள் கோரிக்கையை ஏற்க முடியாது என்று கூறிவிட்டனர்.

இந்த நிலையில் இந்துக்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்தி 'ராமமகாயக்ஞம்' ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இம் மாதம் 17 ஆம் திகதி வரை இந்த யக்ஞம் நடைபெறவுள்ளது

அதே நேரத்தில் முஸ்லிம் மதப் பிரமுகர்கள் தங்கள் நிலையை வலியுறுத்தும் முகமாக 'அயோத்தி யாத்திரை' ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்த யாத்திரை இம் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இந்த நிலையில் இரு இனங்களுக்கும் இடையில் வன்செயல்கள் வெடிக்காமல் பார்த்துக் கொள்ளுவதில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (எ)

### பாகிஸ்தானின் புதிய தளபதி

இஸ்லாமபாத், அக். 12

பாகிஸ்தானின் முப்படைகள் தளபதியாக அட்மாரல் அகமட் ஸிரோகி நியமிக்கப்பட்டார்.

## குடியரசுக் கட்சிக்கு வாய்ப்புக் குறைவு?

அமெரிக்க ஜனதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான உப ஜனதிபதி ஜோர்ஜ் புஷ் வெற்றிபெறுவதற்குரிய வாய்ப்புக்கள் குறைந்து உள்ளதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தன.

குடியரசுக் கட்சியின் உபஜனதிபதி வேட்பாளரான லொயிட் குவெல் அனுபவமற்றவர் என்ற எண்ணம் வாக்காளர் மத்தியில் அதிகரித்து வருவதே இதற்குக்காரணம் என்று தெரிகிறது.

ஜனதிபதிக்கு ஏதேனும் நடந்து விட்டால் அனுபவமற்ற திரு. குவெலினல் ஜனதிபதியாகப் பணியாற்ற முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## போத்தாவைச் சந்திக்க கென்னத் கவுண்டா மறுப்பு

லுஸாக்கா, அக் 12

தென் ஆபிரிக்க நிறவெறி அரசின் ஜனதிபதியான திரு பி. டபிள்யு. போத்தாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த முடியாது என்று ஸாம்பிய ஜனதிபதி கென்னத் கவுண்டா மறுத்துவிட்டார்.

சந்தித்துப் பேசுவதற்கு திரு கவுண்டா நிபந்தனை விதித்திருக்கிறார்

★ அங்கோலா, நமீபியா நாடுகளில் இருந்து தனது துருப்புக்களை தென் ஆபிரிக்கா விலக்கிக் கொள்ளவேண்டும்

★ மொஸாம்பிக்கில் உள்ள தேசிய எதிர்ப்பு இயக்கத்துக்கு அளிக்கும் ஆதரவை தென் ஆபிரிக்கா நிறுத்திக் கொள்ளவேண்டும்.

ஸாம்பிய ஜனதிபதியின் இந்த நிபந்தனைகளைத் தொடர்ந்து, திரு போத்தாவை லுஸாக்காவில் திரு கவுண்டா சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என்ற நம்பிக்கை சிதறுண்டு போனதாக அறிவிக்கப்படுகின்றது. (எ)

## நவராத்திரித் தத்துவம்

முன்னாள் அதிபர், ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் க. கயிலாயநாதன் எழுதி வெளியிட்ட 'சகலகலா வல்லிமாலை மகத்துவம்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஒருபகுதி இக்கட்டுரை ஆகும்.

உலகம் சுழன்ற வண்ணமே நிலவுகின்றது.

எமது நாடி துடித்தலால் உயிர் அயராது இயங்குகின்றது.

அணு அசைவதை விஞ்ஞானம் விளம்பும்.

இதனை 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறையுறை சிவனே' என்று மணிவாசகர் அணி செய்தனர்.

பூமியும், நாடியும், அணுவும் அசைவது நின்றால் எல்லாம் அழிவது தெளிவு

'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்பது அப்பர் செப்பிய அருள்வாக்கு.

நடராசப் பெருமான் ஆடி எம்மைக் காக்க, அம்மை ஒருத்தியே காரணம்.

இயக்கம் காரண காரியம்(Cause and Effect) வசப்பட்டது

சக்தி காரணமாகவும் சிவன் காரியமாயும் எமக்குச் சித்தியும் முத்தியும் தருவர்.

இதன் விளக்கமே தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் என்ற திருவருட்பயன்.

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காத உமை பல பெயர்கள் கொண்டு நிலவுகின்றார்.

நடராசப் பெருமானின் இடப்பாகத்தைப் பிடித்துக் கொண்டு, நின்று நிலவும் உருவே அம்மையப்பர்

அர்த்த நாரீஸ்வரர்- பாதி பெண், பாதி ஆண்.

இவர்களின் ஆட்டமே ஐந்தொழிலாகும்.

ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் நிகழும் பூர்வபக்கப் பிரதமை முதல் நவமி ஈறாக, ஒன்பது இரவுகளே நவராத்திரி எனப்படும்

முதல் மூன்று நாட்களில் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களில இலக்குமியையும், கடைசி மூன்று நாட்களில் கலைமகளையும் வழிபடுதல் மரபு

வாழ்வுக்கு வளந்தரும் வீரத்தை துர்க்கையிடமும், செல்வத்தை இலக்குமியிடமும், ஞானத்தைக் கலைமகளிடமும் வேண்டுகின்றோம்.

ஒன்பதாம் நாளாகிய மகாநவமியன்று புத்தகப் பூசை நடைபெறும்.

பத்தாவது நாள் வெற்றித் திருநாளாகப் போற்றப்பெறும்

இதனை விஜயதசமி [விஜயம்-வெற்றி, தசமி-பத்து] என்பர்.

அன்று தொடங்கும் எச்செயலும், இனிதே நிறைவேறும் என்பது நம்பிக்கை இதனால் அன்று ஏடு தொடக்குதல், தொழில் தொடங்கல், புதிய கருமங்களை நாடுதல் நடைபெறும்

நவராத்திரியைத் தவராத்திரியாக, பல்வேறு வகையாகக்கொண்டாடி வந்துள்ளனர் எமது முன்னோர்.

இவற்றுள் சிறப்பாகக் கொலு வைத்து வணங்குதலை இன்றும் காண்கின்றோம்.

சக்தி, பெண்.

இவளை ஒன்பது இரவு [illegible] கொண்டனர் [illegible] ஆன்றோர்.

ஒன்று முதல் ஒன்பது வயதுடைய குழந்தைகளைத் தெரிந்தெடுத்து, முதல் வயது தொடக்கம் ஒழுங்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குழந்தையைச் சக்தியாகவே வழிபட்டனர்

குழந்தைகள் தெய்வத்தின் உரு

''குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்'' என்பர்

பாலசுப்பிரமணியம் பாலகிருஷ்ணர், பாலதேவன் என்று பாலரின் பெயரிட்டு இறைவனைக் கொள்ளும், இந்து மதம் குழந்தை போன்ற கரவற்ற உள்ளத்திலேயே இறைவன் உறைவான்.

இவ்வுண்மையை, ''குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்.

ஏனெனில், பரமண்டல இராச்சியம் அவர்களதே''

('Suffer the Little Childern to come unto me for such is the Kingdom of God'') என்று இயேசு பெருமான் இயம்பினார்.

கோலாட்டம், காவடி, நாட்டியம், இசை முதலிய கலை நிகழ்ச்சிகள், நவராத்திரி விழாவின் உயிர்நாடியாகப் பரிணமிக்கும்

சுருங்கச் சொல்லின் நவராத்திரி, கலையின் வெளிப்பாடு.

கலை இன்பமே நிலை இன்பமாம்.

இதனைக் காட்டி நிற்கும் மூன்றினைக் கலைமகள் படத்தில் காணலாம்.

அவள் கையிலிருக்கும் புத்தகம் இயற்கலையும், வீணை இசைக் கலையையும், மயில் நாடகக் கலையையும் எடுத்துக் காட்டுகின்றன.

முத்தமிழின் வெளிப்பா[illegible] கண்டு களிக்கின்றோமல்லவா? (ச)

## தாதிமார் பயிற்சிக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், அக் 13

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து தாதிமார் பயிற்சிப் பரீட்சைக்குத் தெரிவானோர் பெயர் பட்டியலின் இறுதிப்பகுதி வருமாறு

கோமளா கனகசபை அச்சுவேலி ஏ சிவனேஸ்வரி கோப்பாய் எஸ் சிவலோஜினி அச்சுவேலி வி இராசமலர் நீர்வேலி தி சிற்சபேசன் கோப்பாய் கே இன்பராணி கோப்பாய் பி சாந்தினி புத்தூர்.

எஸ் ஜெகதீஸ்வரன் உடப்புசல்லாவ கலாவதி கந்தசாமி கோப்பாய் கே சிவனேசன் அச்சுவேலி ஆர் ஜெயச்சந்திரன் அச்சுவேலி வி செல்வபாரதி கோப்பாய் எஸ் ஜெகதீஸ்வரன் கோப்பாய் எம் கந்தையா யாழ்ப்பாணம் எஸ் கோசலா கோப்பாய் எஸ் கணேசராஜ் இளவாலை என் மீராவதி அச்சுவேலி.

எம் பூவைமதி கோப்பாய் ரி ஸ்ரீபிரியா கோப்பாய் வி செல்வசற்குருநாதன் கோப்பாய் ஆர் பிரபாகரன் கோப்பாய் செல்லையா சிவரதி கோப்பாய் எஸ் சந்திராகுமரன் நீர்வேலி எஸ் செல்லத்துரை நீர்வேலி

ஏ உமைராணி கொழும்பு கே புஸ்பவதி ஏழாலை யூ கலைமதி சுன்னாகம் ஆர் உதயகுமார் கொச்சிக்கடை பி சாந்தினி சண்டிலிப்பாய் என் ராஜன் சுன்னாகம் ரி வாகினி சுன்னாகம் ரி முரளிதரன் சுன்னாகம் ரி லெஸ்லி சந்திரன் சண்டிலிப்பாய் ஆர் பிரபாலினி மானிப்பாய் வி கௌரிதேவி ஏழாலை சுமதி நடராசா மல்லாகம் எஸ் அமிர்தேவி சண்டிலிப்பாய் சிவதேவி ராஜரட்ணம் தெல்லிப்பளை ஆர் ஜெகதீஸ்வரி இராமநாதன் அளவெட்டி எஸ் லோஜினி தெல்லிப்பளை ஆர் ஜெகதீஸ்வரி இராமநாதன் அளவெட்டி எஸ் லோஜினி தெல்லிப்பளை ஆர்யரூபரஞ்சனி தெல்லிப்பளை எஸ் பிள்ளைகாங்கேசன்துறை எஸ் ரஞ்சனி காங்கேசன்துறை கே பரிதினி அளவெட்டி எஸ் வாசுகி மல்லாகம் கே திருஅருள் செல்வி அளவெட்டி கே ராதா தெல்லிப்பளை

எஸ் ஜெயலட்சுமி சுழிபுரம் எஸ் சிவனேஸ்வரி சுழிபுரம் எஸ் கிரிதரன் கொழும்பு என் புஷ்பமலர் காரைநகர் ஏ ஆனந்தமூர்த்தி காரைநகர் கே கமலாதேவி காரைநகர் கே சுதர்ஜினி வட்டுக்கோட்டை எஸ் சுபேந்திரன் சங்கானை கே நந்தினிதேவி பண்டத்தரிப்பு வி நிர்மலா காரைநகர் எஸ் மனோகரன் கொழும்பு கே பாஸ்கரன் வட்டுக்கோட்டை கே அகிலேஸ்வரி வட்டுக்கோட்டை எஸ் ராஜேந்திரன் சுழிபுரம் கே சதானந்தன் சுழிபுரம் எம் தயாநிதி சங்கானை.

### கிளிநொச்சி மாவட்டம்

என் கிருஷ்ணமூர்த்தி பரந்தன் என் புஷ்பராணி வட்டக்கச்சி கே நாதன் வட்டக்கச்சி என் புஷ்பராணி கிளிநொச்சி பி கிருஷ்ணவேணி கிண்ணியா என் நடராசமணி பரந்தன் ரி சந்திரமௌலீஸ்வரன் பரந்தன் எம் யசோதை உருத்திரபுரம் ஜி பொன்னம்பலம் பரந்தன் இ சாந்திரேஸ்வரி மிருசுவில் ஜி சிவகுமரன் கிளிநொச்சி ஏ ஆனந்தமாலா பூநகரி வி கலைவாணி கிளிநொச்சி என் விஜயகலா வட்டக்கச்சி பி ஆனந்தசக்தி கிளிநொச்சி கே சிவானந்தராசா பரந்தன் ஆர் ஆர் யாழினி பரந்தன் பி கணேசமூர்த்தி இயக்கச்சி வி பிரேமவதி பளை கே வசந்தினி கிளிநொச்சி வி அனுராகண்டாவளை எம் மாலினி பரந்தன் ரி கோமாறன் கிளிநொச்சி கே வசந்தினி கிளிநொச்சி கே யசோதை கிளிநொச்சி கே வதனராணி கிளிநொச்சி சி பாலானந்தன் வட்டக்கச்சி ரி சந்திரகாந்தி பரந்தன் பி அமுதா கிளிநொச்சி எஸ் கோணேஸ்வரன் கிளிநொச்சி எஸ் சந்திரகுமார் கிளிநொச்சி.

(உ. 107)

## காரைநகரில் அன்னையர் முன்னணி

காரைநகர், அக் 13

காரைநகர் அன்னையர் முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3. 00 மணிக்கு யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெறும்.

இதனை காரைநகர் பிரசைகள் குழுத் தலைவர் திரு. செ. தேவதாசன் அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்

(இ)

## ராஜீவ் கவலை

புதுடில்லி அக் 13

வவுனியாவுக்கு அருகில் உள்ள சிங்களக் கிராமம் ஒன்றில் 45 சிங்களவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கவலை தெரிவித்தார்.

(இ-எ)

## மீனவருக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

மானிப்பாய், அக் 13

கடந்த காலச்சம்பவங்களால் பாதிப்படைந்த மீனவக் குடும்பங்களுக்கு முன்னூறு ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கி வருகின்றனர்.

அரிசி, சீனி, பருப்பு, பால்மா போன்றவை இவற்றுள் அடங்கும்.

(இ-90)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* காஞ்சிபுர * பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

# உதயன்

13 - 10 - 1988 வியாழக்கிழமை

சேட்டிங்ஸ் * சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

தமிழகத்திலிருந்து கூட்டிவரப்பட்டு

இன்னும் விடுவிக்கப்படாதவர்கள்:

# 70 பேர் பருத்தித்துறையில்; 5 பேர் காங்கேசன்துறையில்; 73 பேர் திருகோணமலையில்

யாழ்ப்பாணம், அக் 13

தமிழகத்திலிருந்து இங்கு கூட்டிவரப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களில் 148 பேர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் வெவ்வேறு மூன்றுஇடங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ் போதனை வைத்திய சாலை வளவில் வைத்து அமைதிப்படையினரால் நேற்று விடுவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பெயர் விவரம் வருமாறு:

1. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) 2 ஆன் சிந்தியா (பெண்) 3 பஞ்சோதி, 4. சுகதாஸ், 5. ராஜ், 6. ராசா 7. திலீப் 8. மனோகரன், 9. வில்சன்'

இவர்களில் சதாசிவம் கிருஷ்ணகுமார், சிந்தியா ஆகிய இருவரும் காங்கேசன் துறைப் பகுதியில் உள்ள விடொன்றிலும் ஏனையவர்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் தவிர மிகுதியாக மேலும் 70 பேர் இன்னமும் பருத்தித்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ரஹீம், பஷீர் காக்கா உட்பட 5 பேர் காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

எஞ்சிய 73 பேர் திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

நேற்று விடுவிக்கப்பட்ட எட்டு ஆண்களும் ஏதோ ஒரு விதத்தில் அங்கப் பாதிப்பு ஏற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-9-10)

## மாங்குளம்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தன.

மாங்குளத்தில் இராணுவம் பலத்த பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளது. துணுக்காய் வீதியிலும், வவுனியா வீதியிலும் நடந்து செல்லக்கூட அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது

முல்லைத்தீவில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஒரு சில போக்குவரத்துச் சேவைகளைத் தவிர மற்றவை யாவை ஸ்தம்பிதமடைந்திருந்தன (அ-94)

## கண்டி....

மாணவர் கல் எறிந்து தாக்கினர் என்றும் பின்னர் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்கூறப்படுகிறது.

பொலீஸாரின் தாக்குதலில் 10 மாணவர் காயமடைந்தனர் என்று மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### இரத்தினபுரியில்

இரத்தினபுரியில் இடம் பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலீஸார் கண்ணீர் புகைப்பிரயோகம் செய்தனர். அப்போது ஒரு மாணவர் காயமடைந்தார். (அ-எ-ஐ)

## மூடப்பட்டன

கொழும்பு, அக். 13

மொரட்டுவ, களனி, ருகுணு பல்கலைக்கழகங்களை உடனடியாக மூடுவது என்று அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

இப்பல்கலைக்கழக உபவேந்தர்கள் சமர்ப்பித்த அறிக்கைகளைப் பரிசீலனை செய்த பின்னர் அமைச்சரவை இந்த முடிவை எடுத்தது.

## விடுவிக்கப்,...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தினர். இந்தப் பேச்சுவார்த்தைகளை அடுத்து நகரக் கொமாண்டர் பிரஸ்தாப விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கினார்

பின்னர் இந்தக்குழுவினருக்கு விசேட பாஸ் வழங்கப்பட்டது.

இந்தப் ''பாஸ்'' உதவியுடன் யாழ் போதனை வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவிற்குச்சொந்தமான வாகனம் ஒன்றிலும் விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் மற்றும் பிரமுகர்களும் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் விருப்பத்தின் பேரில் உறுப்பினர்கள் அனைவரும் வடமராட்சிப் பகுதியில் உள்ள சிலரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அறியவருகிறது

வடமராட்சியில் நேற்று ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த உறுப்பினர் கையளிப்பிற்கென நகரக் கொமாண்டரினால் விசேட அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது (அ-9 10)

யாழ்ப்பாணக்கல்லூரி
புதிய மாணவர்
அனுமதி-ஆரம் வருடம்
அனுமதிப்பரீட்சை 15-10-88 சனிக்கிழமை
காலை 9-00 மணிக்கு
கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் பெற்றவர்களும், பெறாதவர்களும் பரீட்சைக்கு வருமாறு கேட்கப்படுகின்றனர்.
— அதிபர்
C-404

பணியாளர் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ''சைனீஸ் ஹொட்டேல்'' ஒன்றிற்கு ஆங்கில அறிவுடைய பணியாளர் Waiter தேவை
காலை 10-00 மணி முதல் 11 00 மணிவரை சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
சைனீஸ் ட்ரகன் றெஸ்ரோரன்ற்
168, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(7021)

ENGINEERING COUNCIL EXAMINATION
PART I (LONDON) MAY 1989
Weekend classes for preparing students for the above examination will commence on Saturday 15th October at 8-00 a m Only limited vacancies on first come first serve basis. Application forms are available at,
484, K. K S. Road,
JAFFNA.
[7020]

## கல்வியங்காட்டில் கடைகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், அக் 13

கல்வியங்காட்டில் வர்த்தகர்கள் மீதுபடையினர் தாக்குதல் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டி நேற்று கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த 10 ஆம் திகதி கல்வியங்காட்டில் உள்ள இராணுவ சென்றிக்கு அருகில் கிரனேட் ஒன்று வெடித்தது

இதனை அடுத்து 11 ஆம் திகதி சகல கடைகளுக்கும் சென்ற படையினர் கடை உரிமையாளர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தியதாக சொல்லப்பட்டது. இதன் காரணமாக நேற்றுக் கல்வியங்காட்டில் உள்ள கடைகள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டிருந்தன.

சந்தையும் நேற்றுக் கூடவில்லை எனினும் இப் பகுதியூடான வாகனப் போக்குவரத்துக்கள் வழமைபோல் நடைபெற்றன.

கல்வியங்காட்டில் நடந்த சம்பவங்கள் குறித்து வர்த்தகர்கள் அமைதிப்படையின் நகரக் கொமாண்டருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

## 2மணி நேர பாடசாலைப் பகிஷ்கரிப்பு

நேற்று புதன்கிழமை யாழ் மாநகரப் பகுதியில் உள்ள பாடசாலைகள் இரண்டு மணிநேர பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

மாணவர்கள் கைது செய்யப்படுவதை முற்றாக நிறுத்துமாறும்கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கக் கோரியுமே இந்தப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாணவர் ஒருங்கிணைப்பு குழுவினால் வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது மேற்படி கோரிக்கைகளுக்கு சாதகமான பதில்கிடைக்காத படியினால் இன்று பிரஸ்தாப பாடசாலைகள வகுப்புகளை ஒருமணி நேரம் பகிஷ்கரிக்கவுள்ளன. (அ-9)

## முல்லையில் துக்க தினம்

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை ஒமந்தையில் இடம் பெற்ற மோதலில் உயிர் நீத்த 12 விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக முல்லைத்தீவு நகர், தண்ணீரூற்று, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

வர்த்தகநிலையங்கள் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இ. போ. ச. பஸ்கள் மட்டுப்படுத்தப்பட்ட சேவையில் ஈடுபட்டிருந்தன. (அ-113)

## நாடற்ற..

கீழ் இலங்கைப் பிரசாவுரிமை பெறுவர்.

இதன் மூலம் நாடற்றவர்கள் என்று எவரும் இலங்கையில் இனி இருக்கமாட்டார்கள் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## அமைதி நிலை தோன்றுவதற்கு.....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பந்தம் ஏற்பட்டபோது அது ஒரு திருப்புமுனை என்பதையும், தற்காலிக ஆறுதல் தரவல்லது என்பதையும் நாம் அன்றைய காலகட்டத்தில் தெரியப்படுத்தி இருந்தோம்.

இது இனப்பிரச்சினையையும், இந்தியாவின் பாதுகாப்பையும் ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்.

இனப்பிரச்சினையில் மலையக மக்களை நாடு கடத்துவதை ஆமோதித்தும், எமது எதிர் காலத்தை நாமே நிர்ணயிக்கும் உரிமையை தட்டிக்கழித்தும் காணப்படும் விடயங்களை நாம் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

### திருத்தங்கள்

இவற்றில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என இந்தியத் தரப்பு தெரிவித்தபோது அதை நாம் வரவேற்றிருந்தோம்.

மேலும் இந்தியாவின் பாதுகாப்பு இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களின் பாதுகாப்பு என்றவகையில் இந்த அம்சத்தையும் நாம் ஏற்றுக்கொண்டிருந்தோம். இவற்றிற்கு அடையாளமாகவே எமது ஆயுத ஒப்படைப்பும் நிறைவேறி இருந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்திய இராணுவம் - புலிகள் மோதலுக்கு இட்டுவந்த வேளையில் அமைதிக்குப் பின்பு தேர்தல் மூலம் தெரிவாகும் பிரதிநிதிகள் ஊடாகவே ஒப்பந்தத்தில் திருத்தமும், இனப்பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வும் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு எமக்கு ஏற்புடையதாகவே இருந்தது.

இதற்காக உடனடி அமைதிகோரி நாம் மக்களின் மன எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஈழத்தின் பல பாகங்களிலும் பகிரங்கப் பிரசாரங்கள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன்படி இங்கு இன்னமும் அமைதி தோன்றவில்லை. அமைதியின் பின் தேர்தலா? தேர்தலின் பின் அமைதியா? என்பதே தற்போதைய பிரச்சினையாகிப்போயுள்ளது

### ஜனநாயகம் அல்ல

தேர்தலின் பின் அமைதி என்ற இலங்கை - இந்திய அரசுகளின் தற்போதைய நிலைப்பாடானது ஒரு ஜனநாயகச் செயல்முறை அல்ல. அமைதி குலைந்த நிலையில் நடைபெறும் தேர்தல் செயற்கையானது, பலவந்தமானது. இதற்காக விடுதலை அமைப்புக்களை கூறுபடுத்தி அணுகுவதும், அவர்களை இணங்கச் செய்வதும் ஆபத்தின் அறிகுறிகளே.

இது நடைமுறைக்கு வருமாயின், இனத்துக்குள்ளான குழப்ப நிலைக்கும் இந்தியாவுக்குப் புறம்பான அந்நிய சக்திகளின் ஊடுருவலுக்கும் வழிகோலும் ஆபத்து உருவாகும் என்பது நிச்சயமானது.

தென்பகுதியில் நடைபெற்ற இவ்வகைசெயற்கையான மாகாணசபைத் தேர்தலும், சபை உருவாக்கமும் எமக்கு படிப்பினைகளாக இருக்கின்றன. செயலற்றுப்போயுள்ள இம்மாகாணசபைகள் சிங்கள மக்களின் அபிலாசைகளை ஈடேற்றவில்லை என்பது துல்லியமானது

### ஆதரிக்க முடியாது

இதனாலேயே நாம் இப்போக்கை ஆதரிக்க முடியாதுள்ளது. ஆதலால் அமைதிக்குப்பின் தேர்தல் என்பதே எமது இன்றைய நிலைப்பாடாகும்.

### இவ்வகை அமைதி நிலை தோன்றுவதற்கு

★ இந்திய இராணுவமும் இலங்கை இராணுவமும் தற்போதுள்ள நிலைகளில் இருந்து நீங்கி தமக்குரிய பிரதான கேந்திர ஸ்தானங்களுக்குச் செல்லவேண்டும்-

★ யுத்த நிறுத்தம் நிரந்தரமாகவே நிலவவேண்டும்.

★ பயங்கரவாதச் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம், ஊரடங்குச்சட்டம் ஆகியன நீக்கப்படவேண்டும்.

★ ஒப்பந்தத்தின்படி அனைத்து அரசியல்கைதிகளும் நிபந்தனை இன்றி விடுவிக்கப்பட வேண்டும்

★ இந்தியாவிலும் இலங்கையிலும் அகதிகளாக விளங்கும் எமது மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு வாக்களிக்கும் நிலைக்கு வரவேண்டும்.

★ மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளுக்காக இடம் விட்டு இடம் நகரவும், தமது கல்வி தொழில் முதலானவற்றை மேற்கொள்ளவும் கலாசாரத்தைப் பேணவும், சுதந்திரமாக பேசவும் இடம் அளிக்கப்படவேண்டும். காலனித்துவ இராணுவத்திடம் அனுமதிகோருவது போல் அமைதிப்படையிடம் அனுமதிகோரும் 'அனுமதிச்சீட்டு' முறை அற்றுப்போகவேண்டும்.

இதுவே தமிழ் பேசும் மக்களின் ஆதங்கமும் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் முறைமை என்பதும் எவருக்கும் புரிந்த ஒன்றாகும்

இவற்றைப் பிரதிபலிக்கும் வகையிலேயே ஈழப்புரட்சி அமைப்பானது தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது.

### அவசரம் ஆகாது

ஆதலால் இலங்கை—இந்திய அரசுகள் தேர்தலுக்காக அவசரப்படுவதை விடுத்து மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்புக்கொடுத்து அமைதி ஏற்படும்வகையில் தமது போக்கை மாற்றிக் கொள்ளவேண்டும் எனக் கோருகிறது

தற்போதைய தேர்தல் நியமன நடைமுறையை மீள்பரிசீலனை செய்து மக்கள் பிரதிநிதிகள் சுதந்திரமாக தேர்தலில் பங்கேற்கக் கூடியதான அமைதிச் சூழல் வரும்வரை ஒத்திப் வைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

மக்களின் சுதந்திர உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையிலமைந்த ஜனநாயக நிலைமை உருவாக்குவதற்காக ஈழப் புரட்சி அமைப்பு தனது பணியைத் தொடர தீர்மானித்திருக்கிறது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாம் கேட்ட வேளை...

[1ஆம் பக்க தொடர்ச்சி)

விதத்தில் இந்தியா நடந்து கொள்ளவில்லை. இந்தியா தானகவே முடிவெடுத்து அந்த முடிவுகளையே எம் மீது திணிக்க முயற்சித்தது.

கடந்த பெப்ரவரி மாதத்துக்கும் ஜூலை மாதத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் உத்தியோகப்பற்றற்ற முறையில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது சுமுகமாக முடிவு காணப்பட்டால் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயார்என்றும் தேர்தலில் பங்குபற்ற தயார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனல் இதே நேரத்தில் இந்தியா எமது தலைவருடன் நேரடி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்கப்பட்டது.

### முடிவுக்கு வந்திருக்கும்

பேச்சுவார்த்தைகளைத் தொடர ஆனையிறவு முதல் திருகோணமலை வரை ஐந்து நாட்களுக்கு யுத்த நிறுத்தம் ஒன்றை அமுல்படுத்துமாறும் கேட்கப்பட்டது.

ஆனல் அந்த ஐந்து நாள் யுத்த நிறுத்தம் வழங்கப்படவில்லை.

அந்த யுத்த நிறுத்தம் அப்போது அறிவிக்கப் பட்டிருந்தால் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்திருக்கும்.

தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் யாவும் எமக்காகக் குரல் கொடுக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட கழகம் அகிய வற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்லலாம்.

திரு. நெடுமாறன், திரு வீரமணி, திரு. கோபால்சுவாமி ஆகியோரும் எமக்காகக்குரல் கொடுக்கின்றனர்.

இந்திய பாராளுமன்றத்தில் எமக்காக ஒலிக்கும் ஒரே குரல் திரு கோபால்சுவாமியுடையது.

எவ்வளவுதான் கட்சி வேலைகள் இருந்தாலும் எமதுபிரச்சினையில் தீவிர அக்கறை காட்டி முழுமூச்சாக இந்தியப் பாராளுமன்றத்தில் எமக்காக குரல் எழுப்பி வருகிறார் அவர்.

இந்திய அமைதிப் படையினர் எங்களை இன்று விடுவிக்க ஆயத்தமானபோது, முதலில் என்னோடு வந்தவர்களையெல்லாம் விடுவித்து கடைசியாக என்னைவிடுவியுங்கள்' என்று அமைதிப்படை அதிகாரிகளிடம் நான் கோரிக்கை விடுத்தேன்.

ஆனல் அவர்களோ, ''எமக்கு வந்த உத்தரவின் பிரகாரமே நாம் உங்களை விடுவிக்கிறோம் ஏனையோரும் விடுவிக்கப் படுவார்கள்'' என்று தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இதுவரை இருபத்தியொரு இந்திய வீரர்களை நாகரீகமான முறையிலும், பண்பான முறையிலும் கையளித்திருக்கின்றனர். எமக்கிருந்த குறைந்த வசதிகளின் மத்தியிலும் நாம் அவர்களை கையளிப்பதில் பண்பான முறையைக் கடைப்பிடித்தோம்.

''ஆனல் நாம் இன்று நாகரீகமான முறையிலும், பண்பான ரீதியிலும் இங்கே கையளிக்கப் படவில்லை. வெறுமனே விடுவிக்கப்பட்டோம்''- இவ்வாறு திரு. கிட்டு சொன்னர். (அ-ஐ-9-10)

## கிட்டு......

(1ம்-பக்கத் தொடர்ச்சி]

துக் கொண்டது.

இத்தவேளையில் ஏனைய எட்டுப் போராளிகளும் வேறொரு ஜீப்பில் இருந்து இறக்கிக் கொண்டு வரப்பட்டனர்.

அனைவரும் ஒன்றாக நிற்கவைக்கப்பட்ட பின் நகரக் கொமாண்டர் திரு கிட்டுவை அணைத்துப் பிடித்த வண்ணம் ''கிட்டுவையும், ஏனைய உறுப்பினர்களையும் உங்களிடம் ஒப்படைக்கிறோம்'' என்று பிரமுகர்களைப் பார்த்துக் கூறினர். பின்னர் திரு கிட்டுவுக்கு கைலாகு கொடுத்து ''குட்பை கடவுள் ஆசீர்வதிப்பாராக'' என்று கூறி விடைபெற்றார்.

பின்னர் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் சிலரையும், மாநகர ஆணையாளரையும் அழைத்த நகரக் கொமாண்டர் அவர்களின் சாட்சியுடன் அனைவரையும் ஒப்படைத்து விட்டு நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு போக இருந்தார்.

அவ்வேளையில் பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவைச் சேர்ந்த பிரமுகர்களும், ஏனைய பிரமுகர்களும் ''இப்படி விடுவிப்பதை நாம் ஆட்சேபிக்கின்றோம் அவர்களின் பாதுகாப்பு எப்படி...?'' என்று குரல் எழுப்பியவாறு நகரக் கொமாண்டரின் அருகே சென்று விளக்கம் அறியும் நோக்குடன் நகரக் கொமாண்டர் செல்வதை தாமதப்படுத்த முனைந்தனர்.

ஆனல் நகரக் கொமாண்டர் விளக்கம் எதுவும் அளிக்க முனையாமலே, மாநகர ஆணையாளரையும் ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரி வளவை விட்டுத் தமது சகாக்களுடன் புறப்பட்டுச் சென்றார். (அ-9-10)

## நீங்கா நினைவு



யாழ்ப்பாணம்அக 1

உதயன் பத்திரிகை அலுவலகத்தில் பணிபுரிந்த செல்வன் குமரையா கமலதாஸ் கடந்த வருடம் அக்டோபரில் நடந்த அனர்த்தங்களின் போது அகால மரணமானர்.

உதயன் நிறுவப்பட்ட காலத்திலிருந்தே பத்திரிகை விநியோகப் பகுதியில் பணிபுரிந்து கடமை உணர்ச்சி உள்ள ஓர் ஊழியராக அவர் விளங்கினர்.

1987 அக்டோபர் பதின்மூன்றில் அவர் உரும்பராயில் வீட்டில் இருந்த வேளை எமன் ஷெல் ரூபத்தில் வந்து அந்தத் துடிப்பான பணிவுள்ள பண்புள்ள இளைஞரை பெற்றோர் உறவினரிடமிருந்து பிரித்துச் சென்றது எமது நினைவிலிருந்து நீங்காதுநிலைத்து நிற்கிறர் அவர்.

அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

— சக ஊழியர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 13-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Utha[illegible] 292/2 Navalar Road, Jaffna on Thursday 13th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org